Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (16-9-65) இதழ் 216

விசுவாவசு ஆவணி 31 ஜ: அவ் பிறை 19 வியாழக்கிழமை

முக்கிய அறிவித்தல்

விளம்பரத்துக்கென்று ஒதுக்கப்பட்ட பணம் செலவாகிவிட்டதால், விளம்பரத்துக்கென நாடி வந்து எங்களுக்குச் சிரமம்தர வேண்டாம் என்று அன்புடன் வேண்டுகிறோம்.

அதிபர்,
மில்க்வைற்சோப்
தொழிற்சாலை,
யாழ்ப்பாணம்.

சந்திரனுக்கு 5வருடம்!

வாஷிங்டன், செப். 15

1970ம்ஆண்டுக்கு முன்பே மனிதனை சந்திரனில் இறக்கும் முயற்சியில் 50 சதவிகிதத்துக்கு மேல் அமெரிக்கா பூர்த்தி செய்திருக்கிறது என அமெரிக்க விஞ்ஞானி டாக்டர் ஆப்ரஹாம்ஸ், விஞ்ஞானிகள் கூட்டமொன்றில் கூறினார்.

எதிர்பாராத தடங்கல் இல்லாவிட்டால் 10 ஆண்டுகளுக்கு முன்பே இது சாத்தியம் என்றும், 3 லட்சம் பேர் இத்திட்டத்தில் வேலைசெய்து வருவதாயும்

(6-ம் பக்கம் பார்க்க)

"என்ன நேர்ந்தாலும் சண்டை நீடிக்கும்

வாழ்வாசாவாஎன்றபோராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம்

பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப் அறிவிப்பு

"வெற்றி அல்லது வீர மரணம்" என பூட்டோ சங்கநாதம்

ராவல்பிண்டி, செப். 15

"இந்தியாவுடன் வாழ்வா அல்லது சாவா என்ற போராட்டத்தில் பாகிஸ்தான் ஈடுபட்டிருக்கிறது. என்னவானாலும் சரி, இந்தப் போராட்டம் தொடரும்" எனபாகிஸ்தான் அதிபர் அயூப்கான் இன்று பகல் வீடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

"வெற்றி அல்லது வீரமரணம்" இது ஒன்றே பாகிஸ்தானின் லட்சியம்" என பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோவும அறிவித்திருக்கிறார்.

ரயில்பாதை பிடிபட்டது

ஜம்மு - ஸியாங் கோட் பகுதியில் பாகிஸ்தானின் முக்கிய ரயில் பாதை ஒன்று இந்தியத் துருப்புக்களிடம் வீழ்ச்சியடைந்திருப்பதாயும், இங்கு நடைபெற்ற பயங்கரச் சண்டையில் 500 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டு 200 பேர் காயமடைந்தனர் என்றும் புதுடில்லி செய்தி ஒன்று கூறுகிறது.

இந்த ஒரு வாரத்தில் 85 பாகிஸ்தானிய டாங்கிகள் இந்த அரங்கில் அழிக்கப்பட்டதனால், டாங்கி பலத்தையே வெகுவாக நம்பியிருந்த பாகிஸ்தான் படைகள் கலக்கமடைந்த நிலையில் வேகமாகப் பின்வாங்கி வருவதாயும் தொடர்ந்து அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானிடமிருந்து கைப்பற்றிய ராணுவ சாதனங்களை பாகிஸ்தான் துருப்புக்கள் மீதே இந்தியராணுவத்தினர் உபயோகித்து வருகின்றனர்.

சம்பகுதியில் ஏராளமான ராணுவசாதனங்களை அவர்கள் விட்டு ஓடினர்.

இன்று

கரவெட்டி கிழக்கு கனகராவளவுப் பிள்ளையார் கோவில் மகாகும்பாபிஷேக விழா 9-ம் நாளான இன்று, சமயப்பிரசங்கத் தொடரில் திருமதி வேதவல்லி கந்தையா 'மங்கையர்க்கரசி' என்னும் பொருள்பற்றி மாலை 7 மணியளவில் உரை நிகழ்த்துவார்.

பல அதிகாரிகள் பலி

பாகிஸ்தான் பீரங்கிப் படைத் தளபதி பிரிகேடியர் ஈ. ஆர். ஸாலியும், ஒரு மேஜர் ஜெனரலும் சண்டையில் கொல்லப்பட்டனர் என்றும், இரு மேஜர்கள், ஒரு லெப்டினண்ட் கர்னல், ஒரு காப்டன் ஆகியோர் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. இதற்கிடையில் பாகிஸ்தான் விமானங்கள் ஜோத்பூர்மீது குண்டு வீசித் தாக்கியதாயும், 40 குண்டுகளை அவைகள் வீசியதாயும், பெரும்பாலும் கிராமத்தில் அவை விழுந்ததாயும் கூறப்பட்டது.

இந்தோனேஷிய விமான சேவை ரத்து

இந்தோனேஷியா பாகிஸ்தானுக்கு ஆயுத சப்ளை செய்வது ஒரு பகை நடவடிக்கை என அந்நாட்டிடம் தெரிவிக்கப்பட்டதாய் வெளிநாட்டுமந்திரி சுவர்ண்சிங் அங்கு கூறினார்,

இந்தியர்களின் சொத்துக்கள் ஜாகர்த்தாவில் அடிக்கடி தாக்கப்பட்டதைத் தொடர்ந்தும், ஏர் இந்தியா காரியாலயம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்தும் ஏற்கனவே 'ஏர் இந்தியா' விமான சேவை நிறுத்தப்பட்டிருக்கிறதென்றும், பம்பாய் வழியாகச் செல்லும் இந்தோனேஷிய விமானங்களும் தங்கள் சேவையை நிறுத்திக்கொண்டுவிட்டன என்றும் அவர் கூறினார்.

உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு

கூ. மொ. வி. கடையில் ஒன்றும் இல்லை

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணத்தில் அத்தியாவசியமான உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதுடன் பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனக் கடையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களே கிடையாது. பம்பாய் வெங்காயம், உருளைக்கிழங்கு, பருப்பு, உழுந்து முதலிய பொருள்கள் எதுவுமே இல்லை. செத்தல் மிளகாய் கிடையாது. ஜப்பான் மிளகாய்க்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் ஆகியநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மட்டுமல்லாது ஈராக் முதலிய மத்திய கிழக்கு நாடுகளிலிருந்துஇறக்குமதியாகும் பொருள்களின் விலையும் அதிகரித்துள்ளது.

பதிவுப் பிரஜைகளுக்கு தனிதேர்தல் இடாப்பு

செனட்டில் தனிநபர் தீர்மானம்

பம்பலப்பிட்டி, புதன்

இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்யப்படவிருக்கும் இந்திய வம்சாவழியினருடைய பெயர்கள், இலங்கைப் பிரஜைகளுக்கான தேர்தல் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டு அவர்களுக்கென வேறான தேர்தல் இடாப்பு தயார்செய்யப்பட வேண்டுமென்றும், மேற்படி இடாப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ள பிரஜைகள் ஐவருக்கு மேற்படாத பிரதிநிதிகளைச் செனட் சபைக்கும், பிரதிநிதிகள் சபைக்கும் தெரிவுசெய்வதற்கான சட்டம் இயற்றப்படவேண்டுமென்றும் இம்மாதம் 20ந் தேதி கூடும் செனட்சபைக் கூட்டத்தில் செனட்டர் ஏ. தஸநாயக்கா பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்கவிருக்கிறார்.

"ஆசியாவில் அமைதியையும், உலக சமாதானத்தையும் மனதிற்கொண்டு காஷ்மீரின் நிலைபற்றி எமது இரு பெரும் நேச அண்டை நாடுகளான இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே எழுந்துள்ள பூசல்களுக்கு முடிவுகாணுமுகமாக அரசாங்கம் தன் வசமுள்ள சக்திகள் யாவற்றையும் பயுன்படுத்தவேண்டுமெனவும், திட்டமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் இச்சபை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது" என்றும் அப்பிரேரணையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இந்திய - பாகிஸ்தான் யுத்தம் ஏனைய நாடுகளையும் பாதிக்கும்"

கம்யூனிஸ்ட் மகாநாட்டில் பேச்சு

யாழ்ப்பாணம், வியா.

"இந்திய — பாகிஸ்தான் மோதல் அந்த இரு நாடுகளுக்கும் மாத்திரமன்றி இலங்கைபோன்ற ஏனைய நாடுகளின் சுதந்திரத்துக்கும் பேராபத்தாகும். அண்மையில் சுதந்திரமடைந்து அபிவிருத்தி அடைந்துவரும் இவ்விரு நாடுகளும் நடத்தும் சண்டை பல ஆண்டுகளுக்கு இவற்றின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக அமைவது திணணம்".

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணக்கிளையின் மகாநாட்டில் சிளையின் செயலாளர் திரு. ஐ. ஆர். அரியரத்தினம் பேசுகையில் மேற்கண்டவகறு குறிப்பிட்டார்.

திரு. அரியரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"இந்திய பாகிஸ்தான்சண்டையினால் இலங்கையின் வியாபாரம் பாதிக்கப்படுவதுடன், விலைவாசிகள் உயர்ந்து வாழ்க்கைத் தரத்தைப் பாதிக்குமென்பதும் உறுதி. இந்நிலையில் இவ்விரு நாடுகளும் போரை நிறுத்தி பேச்சு வார்த்தைகளின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும்படி வற்புறுத்துவது மிகவும் அவசியம். ஆசிய ஆபிரிக்க நாடுகள் 1953-ம் ஆண்டு ஏற்றுக்கொண்ட தீர்மானங்களுக்கு அமைய உருவான ஐக்கிய பாதையைக் கடைப்பிடிப்பது பாக்—இந்திய உபகண்டத்தில் அமைதிகாண ஒரே வழி.

ஸ்தலஸ்தாபன தேர்தல்களில

தேசீய அரசாங்க கட்சிகளிடையே போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம்

தமிழரசு, தமிழ்காங்கிரஸ் கட்சி நிலை விரைவில் தெரியும்

யாழ்ப்பாணம், புதன்

தேசீய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும்சகலகட்சிகளுக்கிடையேயும் சமீபத்தில் நடைபெறவிருக்கும் ஸ்தலஸ்தாபனத் தேர்தல்கள்சார்பாக போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்று ஏற்படலாம் எனத் தெரியவருகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களிலும் இது சாத்தியப்படும் என நம்பப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் கட்சிகளுக்கிடையே இதுபோன்ற போட்டி தவிர்ப்பை ஏற்படுத்த தேசீய அரசாங்கப் பிரமுகர்கள் முயற்சி எடுத்து வருவதாயும், இது விஷயம் தற்போது குறிப்பிட்ட இரு கட்சிகளின் தலைமைப் பீடங்களின் ஆலோசனையில் இருப்பதாகவும் தெரியவருகிறது.

இரு கட்சியினரது அபிப்பிராயங்களும் மிக விரைவில் தெரிவிக்கப்படலாம் எனவும் தேசீய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையே போட்டிகள் நடைபெறுவதை அரசாங்க மேலிடம் விரும்பவில்லை எனவும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

திருவாசகத்தை ஓதியும் உருகாத ஒருயிர் இருக்குமாயின் அதனைக் கல்லென்று கழறுறுமோ, அன்றி மண்ணென்று வகுக்குதுமோ, இரும்பென்று இயம்புதுமோ சொன்மிங்கள்.

— பேராசிரியர், மறைமலையடிகள்

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA.
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆவணிமீ 31 வ. (16-9-65)

உணவுப் பொருள் தட்டுப்பாடு!

இந்திய-பாகிஸ்தான் யுத்தத்தைக் காரணமாகக் கொண்டு உணவுப் பொருள்களைப் பதுக்குபவர்கள்மீதும் கொள்ளை லாபம் அடிப்பவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உணவுக் கமிஷனரும் வர்த்தக மந்திரியும் எச்சரிக்கை விடுத்திருந்தனர். உணவுக் கமிஷனரும் வர்த்தக மந்திரியும்விழிப்புடனிருப்பதைக் கண்டு மக்களும் ஆறுதலடைந்தனர். நாமும் அவர்களைப் பாராட்டினோம். உணவுப் பொருள்களைப் பதுக்குபவர்கள்பற்றியும்கொள்ளை லாபம் அடிப்பவர்கள்பற்றியும் உணவு இலாகா அதிகாரிகளுக்குத் தெரிவித்து இத்தேசத் துரோகச் செயலை ஒழித்துக் கட்டப் பொது மக்கள் உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டுமென்றும் நாம் தெரிவித்திருந்தோம்.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தனிப்பட்ட வியாபாரிகளிடம் தாராளமாகக் கிடைக்கின்றன. அவைகளுக்குத் தட்டுப்பாடு கிடையாது. ஆனால் விலைகள் மட்டும் அதிகரித்திருக்கின்றன. விலை உயர்வைப்பற்றிக் குறுப்பிட்டாலோ உணவு இலாகா உத்தியோகத்தர்களிடம் காட்டிக் கொடுத்தாலோ அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடுமென மக்கள் அஞ்சுகிறார்கள். விலையைக் கூட்டி விற்கும் வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதும் பொருள்கள் பதுக்கப்பட்டுவிடும்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களை வியாபாரிகள் பதுக்கிவைக்கக் கூடுமென்றும் கொள்ளை லாபம் அடிக்கக் கூடுமென்றும் எதிர்பார்த்த உணவு இலாகாவும் வர்த்தக அமைச்சும் இதைத் தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுப்பது பற்றி ஆலோசிக்கவில்லை. தனிப்பட்ட வியாபாரிகள் உணவுப் பொருள்களைப் பதுக்காமல் செய்வதற்கும் கொள்ளை லாபம் அடிப்பதைத் தடுப்பதற்கும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம், பலநோக்கக் கூட்டுறவுச் சங்கக் கடைகள் ஆகியவைகள்மூலம் இப்பொருள்கள் பொதுமக்களுக்குத் தட்டுப்பாடில்லாமலும் நியாயமான விலையிலும் கிடைக்கக் கூடியதாக ஒழுங்கு செய்யப்பட வேண்டுமென இதே பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணம் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனக் கடையில் நேற்று பம்பாய் வெங்காயம், உருளைக்கிழங்கு தொடக்கம் கடுகு, சீரகம் வரையிலான உணவுப் பொருள்கள் எதுவும் கிடைக்கக் கூடியதாக இல்லை. இனி இப்பொருள்கள் பலநோக்கச் சங்கக் கடைகளிலும் கிடைப்பது கஷ்டமே. கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனக் கிளைகளிலிருந்து சில பொருள்கள் 'புறக்கதவு' வழியாக தனிப்பட்ட வியாபாரிகளின் கையில் போய்ச் சேர்ந்திருப்பதாக பொதுவாகப் புகார் கூறப்படுகிறது. இதில் உண்மையில்லாமலிருக்க முடியாது. எனினும் இப்புகார் பற்றி விசாரித்து கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் இவ்வித ஊழல்கள் நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது இச் சமயத்தில் மிகமிக அவசியமாகும்.

யுத்த சூழ்நிலையைப் பயன் படுத்தி 'தேசத் துரோக' வியாபாரிகள் பொதுமக்களின் இரத்தத்தை உறிஞ்சாமல் இருக்க வேண்டுமானால் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தையும் அதன் கிளைகளையும் சரியானமுறையில் திருத்தி அமைத்து இயங்கச் செய்யவேண்டும். கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பலநோக்கச் சங்கக்கடைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு பொது மக்களுக்குத் தட்டுப்பாடில்லாமலும் நியாயமான விலையிலும் கிடைக்க வழி செய்ய வேண்டும். இவ்வித ஒழுங்குகள் செய்யப்படாதவரை அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பதுக்கப்படுவதையும் கொள்ளை லாபம் அடிப்பதையும் தடுப்பது சுலபமல்ல. உணவு இலாகாவும் வர்த்தக அமைச்சும் இவ்விஷயத்தை உடனடியாக ஆராய வேண்டியது அவசியம்.

மேலதிகபஸ்கள்வந்ததும் நிலைமை சீரடையும்

யாழ்ப்பாணம், வியா.

நவாலி சங்கரத்தை பஸ் பிரயாணிகளுக்கு ஏற்பட்டு வந்த கஷ்டங்களைப் பற்றி ஆராயும்படி ஒரு மகஜரை பிரயாணிகள் சார்பில் நவாலி கொத்துக்கட்டி சனசமூக நிலைய உதவித் தலைவர் திரு மு. ஜெயரத்தினமும், வடக்கு நவாலி தொழிலாளர்சமாஜத்துஉறுப்பினர் திரு க.அன்னலிங்கமும் வடபிரதேச மனேஜருக்கு சமர்ப்பித்துள்ளனர்.

இ.போ.ச. உதவி மனேஜர் திரு பி. நடராசாவுடன் இவர்கள் நடாத்திய பேச்சுவார்த்தையின் பயனாக, தாம் பிரயாணிகள் கஷ்டங்களை நன்கு அறிந்துள்ளதாகவும் போதியபஸ்கள் இல்லாததன் காரணத்தினாலேயே பஸ் சேவையில் குறைபாடுகள் காணப்படுவதாகவும் போதிய பஸ்கள் வந்ததும் மீண்டும் நவாலி சங்கரத்தை மூளாய் பஸ்சேவையை ஆரம்பிக்கப் போவதாகவும் உதவி இ. போ.ச. மனேஜர் வாக்குறுதி அளித்துள்ளதாகத் தெரியவருகிறது.

காலையில் காரைநகரிலிருந்து சங்கரத்தை நவாலி ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் பஸ்கள் சனநெருக்கடி காரணமாக சங்கரத்தை நவாலி பிரயாணிகளை ஏற்றாமல் செல்வதால் மாணவர்களும், உத்தியோகத்தர்களும் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர் என்றும் இதற்கும் தீர்வுகாணும்படியும் உதவி இ.போ.ச. மனேஜரை திரு மு. ஜெயரத்தினம் கேட்டுக் கொண்டார்.

சங்கானை பெரியவளவு

முருகனின் சிறப்பு
இன்று பூங்காவனத் திருவிழா

— கலைமணி தெய்வேந்திரம் —

'கயுலிக வரதா, கந்த வேள் முருகா, கடம்பா' எனப் போற்றி புகழும் முருக நாமம் இன்று சைவம் பொலியும் இடமெல்லாம் ஒலித்து வருதலால் பக்தர்களின் இடர்களைந்து போகின்றது. குறிப்பாக நம் நாட்டில் ஆறுமுகக் கடவுளின் ஆறுபடைவீடுகளென நம் முன்னோர்கள் அருள் கூர்ந்து கவனித்தமைக்குக் காரணமில்லாமலில்லை. முதலாவது கதிர்காமம். இரண்டாவது நல்லூர், மூன்றுவது செல்வச்சந்நிதி, நான்காவது மாவிட்டபுரம், ஐந்தாவது பெரியவளவு இறுதியாக அமைவது நுணசை என்பர். ஸ்தலங்களைத் தமது உடைமைகளாக்கிக் கொண்ட ஆறுமுகப் பெருமானின் அருள் மணக்கும் வடிவங்களை ஆங்காங்கு குடி கொண்டிருக்கும் ஊர் மக்கள் விரும்பிய வடிவில் தரிசிக்கவே அகிலாண்டேஸ்வர குமாரராகிய சண்முக வடிவேலன் இவ்வாறுயலயங்களை அடியார்களின் கவனத்திற்குக் கொடுத்தருளினர்.

ஆவணித்திங்கள் பதினைந்தாம் நாள் பெரியவளவு முருகனின் கருணைகூர் முகங்கள் ஆறிலுமிருந்து அடியார்கள் ஞான ஒளியைப் பெறுவதற்கு ஆரம்பிக்கப் பட்டகொடியேற்ற உற்சவம் தொடர்ந்து திருவிழாக்கள் பக்த கோடிகளால் கொண்டாடப் பட்டு வருகின்றது. ஆறுமுகப் பெருமானை அடியார்கள் விரும்பியவடிவில் அலங்கரித்தும், ஆராதனைகள் செய்தும் பூசித்து வருவதுடன் நில்லாது குன்றேறி விளையாடும் குமரவேலன் விரும்பும் வேற்காவடி, பாற்காவடி, தேர்க்காவடி, பிரதட்சணக் காவடிகளுடன் நோன்பு விரதங்கள் அனுஷ்டிக்கும் அடியார்கள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. இவைகள்யாவும் இன்று நடக்கும். பூங்காவனத் திருவிழாக் கோலாகலத்துடன் முற்றுப் பெறும் அஞ்சுதலைப்போக்கிஆறுதலை அளித்து அடியார்கள் வேண்டியதை வேண்டியவாறே ஈந்தருளும் பெரியவளவு முருகவேளின் பேரருட்டிறமைக் காட்சிக்காலங்கள் ஆண்டுதோறும் ஆவணிப் பட்சத்தில் ஆரம்பமாகின்றது.

உள்ளமெல்லாம் உடுகும் வள்ளி மணவாளனின் குஞ்சரி பாகனைப் பக்தகோடிகள் பாடிப்பரவசமாவதற்குக் காலாக பின் வரும் விருத்தம் அமைகின்றது.

சயந்தனின் மிகுந்திடு
கயந்தனில் இலந்துறு
சயந்தனதரைந்து -கெடவே

தத்துவ மகத்துவ பெலத்
தசுரர் தலையெனும் மலைகள்
இடறி புயந்தின நயந்தவர்
மயந்திரம் அழிந்து-கெடவே

பேரவாவுடைய தொரு
வீரவாகையனைப் பொற்
புடன் தூதனுப்பி. மயனந்
தரு மடந்தைகள் மிடந்துறு
மிடந்தினி வழியழிகுழல
விழவே மாபானசூரபன்
மாபான சூரருடல் சரிய
வேலேவு முருகா.

கயம்பிடர் மறைந்திடு
எளிந்தினில் வளர்ந்திடு
களனிவள - பெரியவளவில்

கருணையொடு அமைந்
துறையும் அறுமுக கடவுளே
கண்கண்டதம் - பிரானே.

மந்திரி மாணிக்கவாசகரை நினைவூட்டிய சேர் கந்தையா
மாவிட்டபுரத்தில் அஞ்சலி

மாவிட்டபுரம், புதன்

'சைவமும் தமிழும் தளர்வுற்றிருந்த காலத்தில் நால்வர், நாவலர் போன்ற சமயக்குரவர்கள் தோன்றி சமயத்தை வளர்த்தது போல் சேர். கந்தையா வைத்தியநாதனும் தமது வாழ்க்கையை சமயத்திற்காக அர்ப்பணித்தார். மந்திரியாக இருந்த மணிவாசகர் மன்னனையும் மக்களையும் நன்னெறிப்படுத்த வேண்டி திருப்பெருந்துறையை வந்தடைந்தது போல சிவமணி கந்தையா வைத்தியநாதனும் மந்திரியாக இருந்து அரசியலைத் துறந்து கேதீச்சரம் அடைந்து அணையாத ஜோதியாக அமரரானுர்' என்று மாவிட்டபுரம் பெரியதம்பிரான் கோவிலடியில் திருக்குறிப்புத் தொண்டர்சபையினரால் நடாத்தப்பட்ட விசேஷ பொதுக்கூட்டத்திற்கு திரு. க. கதிர்காமு தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

சிவமணியின் உயிர் மூச்சாக இருந்த கேதீச்சரத் திருப்பணியை விரைவில் முற்றுப்பெறச் செய்து 'கொட்டில்' என்னும் அகத்தை புனித கோட்டமாக்கி வருடந்தோறும் அன்னர் பெயரில் விழா எடுப்பது சைவாபிமானிகள் கடனுகும்.

'சிவமணி' கந்தையா வைத்தியநாதனின் ஆத்ம சாந்திக்காக விசேஷ பூசை ஆராதனைகளும், திருமுறைப்பாடல்களும் நடத்தப்பட்டன. திரு. வ. சின்னத்தம்பி இரங்கற்பாமாலை பாடினார். கந்தையா வைத்தியநாதன் திருக்குறிப்புத் தொண்டர்சபைக்கு அளித்த ஊக்கத்திற்கு அஞ்சலி செய்யும் வகையில் திருக்கேதீச்சரத்தில் திருக்குறிப்புத் தொண்டர்சபையினரால் கட்டப்பட்டு வரும் மடத்திற்கு அவருடைய பெயரைச் சூட்டுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

திருவாளர்கள் கா. சின்னத்துரை, க. பரமநாதன், வ. சின்னத்தம்பி ஆகியோரும் பேசினர்.

மறைந்த

தலைவர்களின் நினைவுவிழா

உடுப்பிட்டி, புதன்

நெல்லியடி தமிழரசு வாலிப முன்னணி நடாத்தும் அமரர் வன்னியசிங்கம், இராஜவரோதயம் ஆகியோரின் நினைவுவிழாவும் சாதி ஒழிப்புப் பிரசாரக் கூட்டமும் நியாயதுரந்தரர் திரு. க. ஜெயக்கொடி தலைமையில் வருகிற சனிக்கிழமை மாலை நெல்லியடி முருகமூர்த்தி ஆலய முன்றலில் நடைபெறவிருக்கிறது. வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழரசு எம். பி.க்கள் இவ்விழாவில் கலந்துகொள்வர்.

ஐயாறன் எழுதுவது

கொழும்பு கோட்டைப் பக்கம் சென்றிருந்தேன். ஒய். எம். பி. ஏ. (பௌத்த வாலிபர் சங்க) கட்டிடமும், ஒய். எம். எம். ஏ. (முஸ்லிம் வாலிப சங்க) கட்டிடமும் பல மச்சுகளுடன் புதிதாக எழுந்துள்ளன. ஏற்கெனவே அப்பகுதியிலிருக்கும் ஒய். எம். ஸி. ஏ. (கிறிஸ்தவ வாலிப சங்க) கட்டடத்துடன் இவ்விரண்டும், கோட்டைப் பகுதியை அழகு செய்கின்றன.

ஆனல் இலங்கையிலே இரண்டாவது பெரிய சமூகமாக விளங்கும் இந்து சமூகத்தின் வாலிபருக்கான ஸ்தாபனம் அங்கு இல்லாதது பெரிய ஏமாற்றமாக இருந்தது.

இந்து வாலிபர் சங்கத்துக்காக அப்பகுதியில் முன்னர் இடம் ஒதுக்கப்பட்டது தான். அது என்ன ஆயிற்றென்று விசாரித்ததில், இந்து வாலிபர் சங்கக் கட்டடத்துக்காகப் பணம் எதுவும் இல்லையென்பதை அறிந்து, அந்த இடத்தையும் பௌத்த வாலிபர் சங்கக் கட்டடத்துடன் இணைத்துவிட்டதாகவும் பின்னர் தேவைப்பட்டால் இந்து வாலிபர்களுக்கு ஏதாவது இடம் கொடுக்கலாமென்றும் பிரதமராக இருந்த சேர். ஜான் கூறி கண் துடைத்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன். இப்போது அங்கு இடமுமில்லை. இந்து சமூகத்தின் சார்பாக இடம் கேட்கவும் ஆளில்லையாம்! அட முருகா!

சில வருடங்களாகக் கொழும்பிலே இந்து வாலிபர் சங்கத்தை உற்சாக மிக்க சில இந்து வாலிபர்கள் அமைத்து நடத்திவருகின்றார்கள். ஒரு மாத சஞ்சிகையைவெளியிடுவதுடன், சிரமதான இயக்கம் முதலிய சமூகப் பணிகளையும் செய்கின்றனர். அந்த வாலிபர்களில் ஏழெட்டுப்பேர் வந்து, தங்கள் சங்கத்துக்குக் கொழும்பிலே கால் ஊன்ற இடம் எதுவுமில்லை என்றும், தங்களுக்கு ஏதாவது சிறிது இடம் கிடைக்குமா என்றும் கேட்டனர். பாவம்!

மற்ற சமய வாலிப சங்கங்கள் பெரிய பெரிய கட்டடங்கள் அமைத்து, கோட்டையிலே பெருமையுடன் விளங்குகையில், இத்தீவிலே இரண்டாவது பெரிய சமூகமாக இருக்கும் இந்துக்களுக்கு அங்கு இடமே இல்லாதது அச்சமூகத்துக்கே மிக வெட்கமாகும். ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட இடமும், பறிக்கப்பட்டும்கூட, இதைப்பற்றி பேசுவதற்கும் ஒருவரும் இல்லையாம்!

தலைநகரில் விவேகானந்த சபையும் மண்டபமும் புகழ் பெற்றன. ஆனல் வித்யாலயத்தை அரசாங்கம் எடுத்துக்கொண்டதும், மண்டபம் அரசாங்க வசமாகிவிட்டது. விளையாட்டு மைதானத்தில் குறுக்குச் சுவர் எழுப்பியுள்ளனர். பெரிய கூட்டம் நடத்த அச்சபையிலும் இப்போது இடமில்லை!

பக்கத்திலுள்ள மோடி கலா கேந்திரத்தின் மண்டபத்தில்தான், அச்சபையின் ஆதரவில், இந்திய ஹைகமிஷனரும் சமீபத்தில் பேசிய கூட்டமும் நடந்தது. ராஜ் மோகன் காந்தி பேசிய கூட்டம், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. வெள்ளவத்தையிலே ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் கடற்கரை ஓரத்தில் கட்டியுள்ள புதிய கலாசார மாளிகை, நவீன முறையில்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானுக்கு ஜெட் விமானங்கள் தர துருக்கி மீண்டும் மறுப்பு

பல மத்திய கிழக்கு நாடுகள் நடுநிலைமை; உதவி செய்ய சூடானும் மறுக்கிறது

"இந்தியாவுடன் சேர காஷ்மீர் மக்கள் விரும்பினால் பாகிஸ்தான் ஆட்சேபிக்காது' — பூட்டோ

லண்டன், செப். 15

இந்தியாவுக்கெதிராகச் சண்டையிட ஜெட்விமானங்களையும், விமானிகளையும் கொடுத்துதவுமாறு பாகிஸ்தான் விடுத்த இரண்டாவது கோரிக்கையையும் துருக்கி நிராகரித்துவிட்டதாய் அங்காராவிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுவதாக இங்கு அறிவிக்கப்பட்டது. இவ்விஷயம் நேட்டோ, சென்டோ வரம்புகளுக்குள் இல்லை எனதுருக்கி கூறிவிட்டது.

ஆனால் 50 லட்சம் டாலர் பெறுமதியான யுத்த சாதனங்களையும், இதர சில கருவிகளையும் வழங்க துருக்கி முன்வந்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. எனினும் தற்போது நடக்கும் இந்திய-பாகிஸ்தான் யுத்தம் போன்ற ஒரு பெரிய சண்டையில் 50 லட்சம் டாலர் உதவி இருதினங்களில் செலவாகிவிடுமென ராணுவப் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

சீனா, இந்தோனேஷியா

சீனா, இந்தோனேஷியா ஆகிய நாடுகள் உதவி புரிவதாக உறுதி கூறியபோதிலும், எந்தவகையில் அவை உதவி செய்ய முடியும் என்பதுபற்றி இன்னும் தெரியவில்லை.

சூடான் மறுப்பு

இந்தோ-பாகிஸ்தான் யுத்தத்தில் பாகிஸ்தானுக்கு உதவி செய்ய சூடான் மறுத்துவிட்டது.

நடுநிலை வகிக்க முடிவு

சிரியா, அல்ஜீரியா, எதியோப்பியா ஆகிய நாடுகள் நடுநிலைமை வகிக்கத் தீர்மானித்திருக்கின்றன.

ஆப்கன், நேபாளம் மறுப்பு

தமது பிராந்தியம் வழியாக பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் செல்ல அனுமதிக்க முடியாது என ஆப்கானிஸ்தானும் மறுத்திருக்கிறது.

இந்தியாவுக்கு எதிராக தமது நாட்டைப் பாகிஸ்தான் எந்தவகையிலும் பயன்படுத்த அனுமதிக்க முடியாது என நேபாளம் அறிவித்திருக்கிறது.

"பகை நடவடிக்கை"

இதற்கிடையில், பாகிஸ்தானுக்கு எந்தநாடு ஆயுத உதவி செய்தாலும் அதைப் பகை நடவடிக்கையாக இந்தியா கருதும் என வெளிநாட்டு மந்திரி திரு. சுவர்ண் சிங் அறிவித்திருக்கிறார்.

முஸ்லிம்கள் வேண்டுகோள்

இந்தியாவிலுள்ள பிரபல முஸ்லிம் ஸ்தாபனங்கள், எந்த வகையிலும் பாகிஸ்தானுக்கு உதவி செய்யக்கூடாது என துருக்கி, ஈரான் ஆகிய நாடுகளைத் தீர்மானம்மூலம் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

சீட்டோ, சென்டோ கைவிரிப்பு

பொதுவாக சீட்டோ, சென்டோ ஒப்பந்த நாடுகள் காஷ்மீர் விஷயம், ஒப்பந்த வரம்புக்குள் இல்லை என பாகிஸ்தானிடம் தெரிவித்திருக்கின்றன.

நியூயோர்க்கில் ஐ. நா. இந்தியக் கோஷ்டிக்குத் தலைமை வகிக்கும் திரு. சக்ளா, பாதுகாப்புச்சபை பாகிஸ்தானை ஒரு ஆக்கிரமிப்பு நாடாகக் கண்டனம் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

தற்போது பாகிஸ்தான் வந்திருக்கும் ஈரான் பிரதமரும், துருக்கி வெளிநாட்டு மந்திரியும் பாகிஸ்தானுக்கு முழுஆதரவைத் தெரிவித்திருப்பதாய் பாக். வானொலி அறிவித்தது.

சீனா ஆட்சேபம்

இதற்கிடையில் கல்கத்தா, பம்பாய் ஆகிய நகரங்களிலுள்ள சீன வங்கிகளை இந்திய அரசாங்கம் கைப்பற்றியிருப்பதை எதிர்த்து சீனா ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது.

பூட்டோ பேச்சு

ஈரான் பிரதமருக்கும், துருக்கி வெளிநாட்டு மந்திரிக்கும் அளிக்கப்பட்ட இரவு விருந்தில் பாகிஸ்தான் வெளிநாட்டுமந்திரி திரு. பூட்டோ பேசுகையில், பாகிஸ்தான் நியாயமான ஒரு கொள்கைக்காகவே சண்டையிடுகிறது என்று கூறினார்.

பாகிஸ்தான் சமாதான லட்சியத்தையே கொண்டிருப்பதாயும் 18 வருடங்களாகக்

(4-ம் பக்கம் பார்க்க)

லாகூரிலிருந்து அமெரிக்க பிரஜைகள் வெளியேற்றம்

6 விமானங்கள் 900 பேரை ஏற்றிச் செல்கின்றன

ஜம்மு மீது பாகிஸ்தான் குண்டு வீச்சு

புதுடில்லி செப். 15

லாகூரிலுள்ள 900 அமெரிக்கப் பிரஜைகளை ஏற்றிச் செல்லும் பொருட்டு 6 அமெரிக்க விமானங்களை அங்கு இறக்க இந்திய அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறது. பாகிஸ்தான் பகுதியான லாகூரில் வானப் பகுதி ஆதிக்கத்தை இந்திய விமானப்படை முற்றுகப்பெற்றுவிட்டதால் அமெரிக்கா தனது விமானங்களை இறக்க டில்லியிடம் அனுமதி கோரியிருந்தது. அமெரிக்க விமானங்கள் இன்று லாகூர் வருகின்றன.

ஜம்மு-ஸியால் கோட் அரங்கில் இந்தியத் துருப்புக்கள் தொடர்ந்து முன்னேறி வருவதை அடுத்து, பாகிஸ்தான் துருப்புக்கள் பின்வாங்கி வருவதாக அறிவிக்கப்படுகிறது, பொதுவாக எல்லா யுத்த முனைகளிலும் இந்தியத் துருப்புக்களுக்குச் சாதகமான நிலை ஏற்பட்டிருப்பதாக மேலும் கூறப்பட்டது.

தப்புக் கணக்கு

கசூர் பகுதியில் ஓரிடத்தில் இந்தியத் துருப்புக்கள் போர்த் தந்திரத்திற்காகப் பின்வாங்கியதை தவறுதலாகப் புரிந்துகொண்டு, பாகிஸ்தான் பெருமளவு படைகளுடன் எதிர்த்தாக்குதல்

(4-ம் பக்கம் பார்க்க)

நிர்வாக எழுதுவினைஞரின்

நிறுத்தப்பட்ட பதவி உயர்வு மீண்டும் வழங்க முடிவு

பம்பலப்பிட்டி, செவ்டாக்டர் என். எம். பெரேரா கூட்டரசாங்க ஆட்சிக்காலத்தில் நிதி அமைச்சராக இருந்த பொழுது நிர்வாக எழுதுவினைஞர் தரம் 11க்கு சிங்களத்தில் தகைமையின்மை காரணமாகப் பதவி உயர்வு மறுக்கப்பட்டவர்களுக்கு 1-10-64 தொடக்கம் பதவி உயர்வு அளிக்கத் திறைசேரி முன்வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

திறைசேரி மேலதிக உதவிச் செயலாளர் திரு. கூரேயை அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தூதுக்குழு இதுவிஷயமாகப் பேட்டி கண்டதன் விளைவாக இப் பதவி உயர்வைக் கொடுக்க திரு. கூரே ஒப்புக்கொண்டதாகத் தெரியவருகிறது.

1-10-63ல் உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டதால் 1-10-64 தொடக்கமே பதவி உயர்வு அளிக்கப்படுமென்றும், அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் இந்த முடிவைத் தற்காலிகமாக ஏற்றுக் கொண்டுள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவால் சுமார் 100 தமிழ் ஊழியர்கள் பதவிஉயர்வு பெறுவார்கள் என்றும், அமைச்சரவையின் அண்மைய முடிவின்படி பரீட்சைகளுக்கும், பதவி உயர்வுகளுக்கும் சிங்களத் தகைமை இனிமேல் பார்க்கப்படமாட்டாதென்றும் அறியப்படுகிறது.

கணக்காய்வாளர், கணக்காளர் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கும் சிங்களத் தகைமை முன்பு நிபந்தனையாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

"சமயத்தையும் மொழியையும் பாதுகாப்பதில் முதன்மையானவர்"

புதிய சமாதான நீதிபதிக்கு பாராட்டு

மாவிட்டபுரம், புதன்

"ஆலயத்தைச் சார்ந்து இயங்கும் மன்றங்களும், சங்கங்களும் தமது பணிகளைச் செவ்வனே செய்து கொள்ளமுடியும் என்பதற்கு மாவை முத்தமிழ்க் கலைமன்றம் சான்றாகும். சமயத்தையும், மொழியையும் பாதுகாக்க அக்காலத்தில் மன்னர்கள் இருந்தது போல, இக்காலத்திலும் பலர் இருக்கின்றனர். அவர்களில் முதன்மையானவராகச் சிறுப்பர் சு. கனகசபையைக் குறிப்பிடவேண்டும்" என்று வலி. வடக்கு காரியாதிகாரி திரு. தி. முருகேசம்பிள்ளை மாவிட்டபுரத்தில் நடைபெற்ற பாராட்டுவிழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

மாவை முத்தமிழ்க் கலை மன்றப் போஷகரான திரு. சு. கனகசபைக்கு அரசினர் சமாதான நீதவான் பட்டம் வழங்கிக் கௌரவித்ததைப் பாராட்டி மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்றம் பாராட்டு விழாவொன்றை நடத்தியது.

காரியாதிகாரி திரு. தி. முருகேசம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. சு. கனகசபை, மாவை முத்தமிழ்க் கலைமன்றத்தின் கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டினார். கோயில் வாசலில் இருந்து விழாமண்டபம் வரை திரு. சு. கனகசபை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

மன்றத் தலைவர் சிவஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் வரவேற்புரை நிகழ்த்தும்போது, சமயத்தையும், மொழியையும் வளர்க்க, திரு. கனகசபை போன்ற பிரபுக்கள் முன்வரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கிருபாமூர்த்தி பாராட்டுரை வழங்கும்போது திரு. கனகசபை யாழ்ப்பாணத்தின் சேமிப்புக்கு அத்திவாரமிட்ட பெரியாரெனக் குறிப்பிட்டார்.

கணேசையர் தமிழ்ச்சங்கம், சன்மார்க்கசபை, முத்தமிழ்க்கலைமன்றம் என்பன பாராட்டுரைகள் வாசித்தளித்தன. முதலியார் சி. முத்துத்தம்பி உட்பட மற்றும் பலர் உரைநிகழ்த்தினர். செல்வி இந்திரா கணபதிப்பிள்ளையின் இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

30,587 பேர் வந்தனர்

பெர்லின், செப். 15

1964 அக்டோபர் 1965 ஜூலை மாதங்களில் மேற்கு பெர்லினிலிருந்து 30,587 பேர் அவசரமான குடும்ப விஷயமாக ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்குள் பிரவேசித்தனர். சுகவீனம், மரணம், விவாகம், பிரசவம் முதலிய குடும்ப விஷயங்களை முன்னிட்டு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கு வருவதக்கு விசேட 'விஸா' வழங்கப்படுகின்றன. ஏனையோர் மேற்கு பெர்லினிலிருந்து குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்குள் வரவாம். இதற்கான ஒப்பந்தமும் உண்டு.

சமயகுரு பட்டாபிஷேகம்

மாவிட்டபுரம், புதன்

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்த சுவாமி கோவிலில் சமயாசாரியருக்கு குடுப்பட்டாபிஷேகம் அளிக்கும் வைபவம் ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

கிரிமலை நகுலேஸ்வரதேவஸ்தான ஆதீனத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ கா. துரைச்சாமிசர்மாவுக்கு மாணவ முருகன் ஆலயத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள், ஐ. வைத்தியநாதக்குருக்கள், தி. கு. நகுலேஸ்வரக்குருக்கள் ஆகியோர் குடுப்பட்டாபிஷேகம் செய்து வைத்தனர்.

மந்திரி விஜயம் ஒத்திவைப்பு

பருத்தித்துறை. புதன்

இம்மாத இறுதி வாரத்தில் வடபகுதிக்கு விஜயம் செய்யவிருந்த சுகாதார மந்திரி அடுத்த மாதத்தில் இங்கு விஜயம்செய்வாரெனத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கைத்தொழில்களை ஆரம்பிக்க செல்வந்தர் முன்வரவேண்டும்"

பருத்தித்துறை, புதன் கிராமங்கள்தோறும்பணம் படைத்தோர்முன்வந்து சிறு கைத்தொழில்களை ஆரம் பித்தால் வாலிபர்கட்கு வேலைவாய்ப்பு ஏற்படுவது டன் கிராமரீதியில் பொரு ளாதாரவளமும் சுயபூர்த்தி யும் நிச்சயம் ஏற்பட ஏது வாகும். தனவந்தர்களி டையே இந்த மனமாற்றம் ஏற்பட வேண்டியது நமக் கும் நாட்டிற்கும் அவசிய மாகும்,

இவ்வாறு பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத் தினம், தும்பளை கிழக்கு சனசமூக நிலைய ஆரூவது வருடாந்த விளையாட்டுப் போட்டி விழாவில் பேசுகை யில் கூறினர்.

திரு. பொ. ஐயாத்துரை கொடியேற்றி வைக்க ஆரம் பமான இவ்விழா வைபவத் திற்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ. சி. மாணிக்கவாசகர் தலைமை வகித்தார்.

அவர் தமது தலைமையுரை யில் சனசமூக நிலையங்கள் நூல்நிலையல்களை வைத்து நடாத்துவதுடன் நின்று விடாது அதுபோன்ற விளை யாட்டுப் போட்டிகளை நடா த்தி பண்புள்ள சமுதாய வளர்ச்சிக்கு உதவுவதுடன் திடகாத்திரமான சந்ததி யைத் தோற்றுவிக்க முயல வேண்டியது அவசியமெனக் கூறியதுடன் கிராமங்களில் ஐக்கியம் சுபீட்சம் ஆகிவை யையும் உருவாக்கவேண்டும் என்றார்.

காரியாதிகாரி திரு. ஏ. சி. விசுவநாதன் இவ்விழா வில் கலந்துகொண்டு உரை யாற்றியதுடன் வெற்றி வீரர்கட்குப் பரிசில்களையும் வழங்கினர்.

REGAL--JAFFNA
NOW SHOWING!
JAMES PHILBROOK
IN
WILD WESTERNERS
(Eastman Color)

புதியதேர்க்கொட்டகை திறப்புவிழா

உரும்பராய், வியா. கடவுள் அண்டமாய் இருந்துகொண்டே அதே சமயத்தில் அதற்கு வேரூய் அதன் மத்தியில் எழுந்தருளி அண்டசராசரங்களனைத்தை யும் தாம் இயங்காமலே இயங்கச்செய் தருளுகின் றார். இது கருணைகரப்பெரு மானின் திருவருள் வல் லமை இவ் வல்லபத்தைத் தரிசித்துத் தலைவணங்கித் தாள் தலைப்பட வைப்பதே தேர்த்திருவிழா'' இவ் வாறு உரும்பராய் கருணை கரப்பிள்ளையார் கோயிலில் இருபத்தையாயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப் பெற்ற புதிய சித்திரத் தேர்க்கொட்டகைத் திறப்பு விழாவை ஆரம்பித்துவைத் துப் பேசும்போது பண்டித மணி திரு. சி. கணபதிப் பிள்ளை குறிப்பிட்டார்.

சைவபரிபாலனசபைத் தலைவரும் திரு.அ. தனபால சிங்கம் கூட்டத்துக்கு தலைமைவகித்தார்.

திரு. அ. நல்லதம்பி தேர்க்கொட்டகையைத் திறந்துவைத்தார். இவர் தேர்க்கொட்டகையுள் சித் திரத்தேரை இழுத்துவிட்டு ஆயிரத்தொரு ரூபா திருப் பணி நிதிக்கு உதவினர்.

கமிஷனர் ஆட்சியில் மாநகரசபை

காலி, புதன் மாத்தறை மாநகரசபை யின் தேர்தல்காலவரையறை யின்றி ஒத்திவைக்கப்பட் டுள்ளது. அடுத்த ஆண்டு முற்பகுதியில் தேர்தல்கள் நடைபெற இருந்தன. கடந்த நான்கு வருடங் களாக மாத்தறை மாநகர சபை விசேஷ கமிஷனரின் ஆட்சிக்குட் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணை (திருமலை) விஜிதா (ஹட்டன்)
மொடேர்ன் (பண்டாரவளை) தீவொளி (நுவரெலியா) லக்ஷ்மி (இரத்தினபுரி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2 காட்சிகள்; சனி, ஞாயிறு 4காட்சிகள்
சிவாஜிகணேசன், சாவித்திரி
எஸ். எஸ். ராஜேந்திரன், கே. ஆர். விஜயா
நடிக்கும்

கைகொடுத்த தெய்வம்

லாகூரிலிருந்து அமெரிக்க....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தியதாயும். ஆனல் பல த்த சேதத்துடன் அவர்களை முறியடித்து இந்தியர்கள் முன்னேறிச் செல்கின்றனர் என்றும் கூறப்பட்டது.

இந்த எதிர்த்தாக்குதலில் அமிர்த சரஸை நோக்கிகூட முன்னேறலாம் என பாகிஸ் தான் கருதி, அதற்கேற்ப செயல்பட்டது என்றும், ஆனல் விஷயம் பிழைத்து விட்டது என்றும் அறிவிக் கப்பட்டது.

4-வது கெவல்ரி' அழிந்தது

பாகிஸ்தானின் முதலா வது கவசப்படை டிவிஷ னைச் சேர்ந்த 4-வது 'கெவ ல்ரி' டிவிஷன் இப்போது முற்றுக அழிந்துவிட்டதென் றும், இதனல் அவர்கள் கலக்கம் அடைந்திருக்கிறர் கள் என்றும் மேலும் அறி விக்கப்பட்டது.

ரோமரின் சாதனை

2-வது உலக மகாயுத்தத் திற்குப்பின் களரில் நடை பெற்ற டாங்கிச் சண்டை தான் இதுவரை மிகப்பயங் கரமானது என்றும், இந்தச் சண்டையில் 52 பாகிஸ் தான் டாங்கிகள் அழிக்கப் பட்டன என்றும், 6 இந்திய டாங்கிகள் நாசமாயின என் றும் அறிவிக்கப்பட்டது. ஒரு பாகிஸ்தான் ஹெலிகோப்ட ரும், 2 பாக். விமானங்களும் சுட்டு வீழ்த்தப்பட்டன என்றும், இந்தச் சண்டை யின்போது வரலாற்றுப்புகழ் பெற்ற ஜெர்மன் ஜெனர லான ரோமல் காட்டிய சாசனம் இந்தியத் தரப்பில் நிகழ்த்தப்பட்டதாயும் கூற ப்படுகிறது.

ஜம்மு மீது பாக். குண்டுவீச்சு

இன்று காலை ஜம்முவில் பாகிஸ்தான் வெடிகுண்டு விமானங்கள் கண்மூடித்தன மாக சிவிலியன்கள் மீது குண்டுகளைப் பொழிந்தன என்றும், அவர்களின் குறி மிகமோசமாக இருப்பதால் ரா ணுவ இலக்குகளுக்கு வெகுதூரம் தள்ளியேகுண்டு கள் விழுகின்றன என்றும் அறிவிக்கப்பட்டது.

பஞ்சாபின் பல பகுதிக ளில் 17 பாகிஸ்தான் பாரா துருப்புக்கள் கொல்லப்பட் டதாயும், 7 பேர் பிடிக்கப் பட்டதாயும் கூறப்பட்டது.

அஸ்ஸாம் எல்லை மூடப்பட்டது

இதற்கிடையில் அஸ்ஸாம் எல்லையை பாகிஸ்தானியர் மூடிவிட்டனர். அதே சம யம் இப்பகுதியில் பாகிஸ் தானியர் உள்ளே பிரவேசிப் பதையும், வெளியே செல்வ தையும் அஸ்ஸாம் அரசாங் கம் தடுத்துவிட்டது.

சிவிலியன்கள் மீது தாக்குதல்

ராஜஸ்தான் ஜோத்பூர் பகுதியில் 8 பாகிஸ்தான் ஜெட்விமானங்கள் சிவிலி யன்கள் மீது குண்டுவீசின என்றும் சேதம்பற்றி இப் போது மதிப்பீடு செய்யப் பட்டு வருவதாயும் அறிவிக் கப்பட்டது.

பாகிஸ்தானிய விமானங் கள் அமிர்த சரஸை இரு முறை தாக்க முயன்றன என் றும், ஆனல் அவை விரட்டி யடிக்கப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது.

ஜோதியான பகுதியில் ராஜஸ்தான் கால்வாய்ப் பகுதியைத் தாக்கும் முயற் சியிலும் பாகிஸ்தான் விமா னங்கள் தோல்வியடைந் தன.

மேற்கு வங்கத்தில் நடை பெற்ற விமானத்தாக்குத லில் 4 விமானங்கள் விரட் டப்பட்டன.

அடையாளம் தெரியாத விமானங்கள்

நேற்றிரவு மகாராஷ்டிரத் தில் பல இடங்களில் அடை யாளம் தெரியாத 4 விமா னங்கள் தலைகாட்டி மறை ந்துவிட்டன. அஹமதாபாத் தில் விமான அபாய அறி விப்புச் சங்குகள் முழங்கின. ஆனல் தாக்குதல் எதுவும் நடைபெறவில்லை. பிக்கானீ ருக்கு உயரேயும் பாகிஸ் தான் விமானங்கள் தென் பட்டன.

அகந்தயா விமான நிலை யத்தை பாகிஸ்தான் விமா னங்கள் தாக்கி சிறிதுசேதம் ஏற்படுத்தியதாய் அறிவிக் கப்பட்டது.

கீழக்கு எல்லையில் நெருக்கடி

கிழக்கு பாகிஸ்தான் திரி புரா எல்லையிலும் பாகிஸ் தான் படைகளைத் திரட்டி வருகிறது. படைக் குழிகளை யும், நில அறைகளையும் அவர்கள் அமைத்து வருகி ருர்கள் என்றும், சிவிலியன் களை வெளியேற்றி வருகிறர் கள் என்றும் அறிவிக்கப்பட் டது. எந்த நிலைமையும் திட மாகவும், தைரியமாகவும் சமாளிக்க மக்கள் தயாராக இருக்க வேண்டும் என்றும், பாகிஸ்தான் பாரா துருப்பு களை இறக்கி புதிய முறை யில் தாக்குதல் நடத்த முனைவதாயும் அஸ்ஸாம் முதல்வர் கூறியிருக்கிறர்.

இந்தியாவிலுள்ள முன் னுள் முஸ்லிம் லீக் தலைவர் திரு. பஸ்றுல் ரஹ்மான் பாகிஸ்தான் ''ஆக்கிர மிப்பு'' பற்றிக் கண்டனம் தெரிவித்திருக்கிறர்.

தேர்தல்கள் ஒத்திவைப்பு

நெருக்கடிநிலை காரண மாக ஆந்திர பிரதேசத்தில் 64 மாநகரசபை தேர்தல் களை ஒத்திப்போடும் அவச ரக் கூட்டத்தைக் கவர்னர் பிறப்பித்திருக்கிறர். மைசூ ரிலும் பல ஸ்தாபனத் தேர் தல்களை ஒத்திவைக்க அவ சரச்சட்டம் பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

ஆர்ப்பாட்டங்கள்

பம்பாயிலுள்ள முஸ்லிம் கள் நேற்று துருக்கி, ஈரான், இந்தோனேஷியா தூதரா லயங்களுக்கு முன் நடத் திய ஆர்ப்பாட்டத்தில் பாகிஸ்தானுக்கு உதவி செய்ய வேண்டாம் எனக் கோஷமிட்டனர். பம்பாயி லுள்ள ஈரான் மக்கள் பாகிஸ்தானுக்கு ஆதரவ ளிப்பதுபற்றி ஈரான் மன் னர் ஷாவுக்குக் கவலை தெரி வித்திருக்கிறர்கள்.

காஷ்மீர் கவர்னர் டாக் டர் கரன்சிங் நேற்று விடுத்த ஒலிபரப்புச் செய்தி யில், வழக்கம்போல் பாகிஸ் தானின் புதிய படையெ டுப்பும் முற்றுகத் தோல்வி யுற்றுவிட்டதாய்க் கூறியி ருக்கிறர்.

சமாதானம் வேண்டும்

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு செய் திருப்பதாயும், சண்டை நின்று சமாதா னம் ஏற்பட வேண்டும் என் றும் ஆச்சார்யா வினோபா பாவே தெரிவித்திருக்கிறர்.

சனசமூக நிலைய ஆண்டு விழா

மீசாலை, புதன் 'அஞ்ஞானஇருளைப்போக்கி உலக அறிவையூட்டி நாட் டை உயர்த்தி மனிதனை மதிப்புடன் வாழச்செய்ய சனசமூக நிலையங்களும் நூல் நிலையங்களும்தான் நல்ல துணை புரிகின்றன.

மீசாலை அரசடி சனசமூக நிலைய விவேகானந்த சன சமூகநிலையத்தில் நடை பெற்ற ஆண்டுவிழாவில் கல ந்துகொண்டு பேசுகையில் திரு. இ. த. சுப்பிரமணி யம் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

இளைப்பாறிய தலைமையா சிரியர் திரு. ச. சுப்பையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆசிரியர் திரு வ. கணேசன் பேசு கையில், ஓய்வு நேரத்தை வீணைக் கழிப்பதால் நாட் டில் குற்றம் மலிவதாகவும் இத்தகைய வாசிகசாலைகள் மூலம் ஓய்வுநேரத்தை நல்ல வழியில் கழிக்கலாம் என்று கூறினர்.

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திரு. மு. விஜ சித்தம்பி உட்பட வேறு பல ரும்பேசினர்.

புதுவருட உத்தியோகத் தர்கள் வருமாறு:—

போஷகர்: திரு. ஆர். டி. சிவகுரு(நகரபிதா), தலைவர்: திரு. ச. சுப்பையா, உப தலைவர்கள்: திரு. மு. விஜ சித்தம்பி, திரு. ச. வேலுப் பிள்ளை, காரியதரிசி: திரு. க. சதாசிவம், உபகாரிய தரிசி: திரு. வ. சின்னத் துரை, பொருளாளர்: திரு. சு. முருகேசு. ஒன்பது பேர் கொண்ட நிர்வாகசபையும் நிறுவப்பட்டது.

வைத்தியசாலை திறப்புவிழா

வத்தேகம, புதன் ''உள்ளூராட்சி மன்றங்க ளின் கீழ் சுதேச வைத்திய சாலைகளைத் திறந்து நிர்வ கித்துவரும் நமது அரசாங் கம் வேற்றுமை பாராட் டாது மலைநாடுகளிலும் சுதேச வைத்தியசாலைகளை நிறுவித்த வேண்டும்'' என் று ஆசிரியர் சு. துரைசிங் கம் 'தவனந்தன்னை'யில் டாக்டர் சு. மகாலிங்கத்தின் சுதேசவைத்திய திறப்பு விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

புதிய வைத்தியசாலையை திரு ஜே. நாராயணசாமி திறந்துவைத்தார். திறப்பு விழாவில் டாக்டர் சு. மகா லிங்கம் தமது புதிய வைத் தியசாலைக்கு நல்லாதரவு கிடைக்குமென்று நம்பிக்கை தெரிவித்தார். மற்றும் பல ரும் பேசினர்.

வன்னியசிங்கம் ஞாபகார்த்தவிழா

நல்லூர், வியா. மாவிட்டபுரத்தில்வருகிற சனிக்கிழமை அமரர் வன் னியசிங்கம் ஞாபகார்த்த விழா கொண்டாடப்பட விருக்கிறது. திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமை யில் நடைபெறும் இவ்விழா வில் நல்லூர் எம். பி. டாக் டர் ஈ. எம். வி. நாகநாதன் உட்பட வட கிழக்குபாராளு மன்ற உறுப்பினர்கள் உரை நிகழ்த்துவர்.

பாகிஸ்தானுக்கு.....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

காஷ்மீர் பிரச்னை தீர்க்கப்படவில்லை என்றும், ஐ. நா. தீர்மானத்திற்கேற்ப அது தீர்க்கப்பட வேண்டும் என்றும் திரு. பூட்டோ மேலும் குறிப்பிட்டார்.

இந்தியாவுடன் சேர விரும்பினல் ஏற்போம்

பாகிஸ்தான் அநியாயமான எந்தக் கோரிக்கையையும் விடுக்கவில்லை என்றும், காஷ் மீரில் வாக்கெடுப்பு நடத்துவதின்மூலம் காஷ்மீர்மக்கள் இந்தியாவுடன் சேர விரும்பினல் அதைப் பாகிஸ்தான் ஆட்சேபிக்காது என்றும் அவர் கூறினர்.

57 பாக். சிவிலியன்கள் பலி

இந்திய விமானங்கள் சிவிலியன்கள்மீது குண்டுவீசியதாயும் இதனல் 57 பாகிஸ்தானி யர் கொல்லப்பட்டனர் என்றும் பாகிஸ்தான் ரேடியோ அறிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்

பண்டகசாலைப் பொறுப்பாளர் பதவி விண்ணப்பம்

இராமநாதபுரம் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கப் பண்டகசாலைக்கு ஒரு பொறுப்பாளர் தேவை. பின்வரும் தகமைகளுடையோர் விண்ணப்பிக்கவும்.

1. சிரேஷ்ட தராதரப் பத்திரம். 2. வயது:. 25 தொடக்கம் 40 வரை. 3. கூட்டுறவுப்பயிற்சித்தராதரப்பத்திரம். 4. பிணை ரொக்கம் ரூபா 1000/: **அதனம்** ரூபா 2000/- 5. வேதனம் ரூபா 110/- (எல்லாம் உட்பட) திறமைக்கேற்ப **கூடிய வேதனம்** பின் வழங்கப்படும். 6. விண்ணப்ப முடிவு திகதி 24-9-65. 7. வியாபார அனுபவமுடையவர்களுக்கு விசேட சலுகை அளிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் ''தலைவர் இராமநாதபுரம் பலநோக்கக் கூட்டுறவுச்சங்கம் கிளிநொச்சி'' என்ற விலாசத்திற்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப் படல்வேண்டும்.

வி. சின்னையா,
தலைவர்.
15-9-65 857

கொழும்பு

வியாழன் 16-9-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 படப்பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 தமிழோடிசை, 7-00 பேச்சு, 7-15 கோட்டுவாத்தியம், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 கலைவிழா — மாட்டக்களப்பு அஞ்சல்.

பாரதிவிழா

பரிசுப்போட்டி முடிவுகள்

கொஸ்லாந்தை, புதன்

கொஸ்லாந்தை பாரதி கல்லூரியில் நடைபெற்ற பாரதிவிழாவில் கலந்து கொண்டு பரிசு பெற்றவர்களின் விபரங்கள் வருமாறு:

பேச்சுமேற்பிரிவு: சி. நாராயணன், ஆ. பொன்னம்பலம், பொ. பெரியசாமி.

மத்தியபிரிவு: சி. அகிலாண்டேஸ்வரி, ஆ. இராசையா, சி. புவனேஸ்வரன்.

கீழ்ப்பிரிவு: ப. கிருஷ்ணன், க. தங்கராஜ், மு. சுப்பிரமணியம்,

இசை மேற்பிரிவு: வெ. வைத்திலிங்கம், பி. கிருஷ்ணன், இரா. வனத்தாய்.

மத்தியபிரிவு: சி. சிவலிங்கம், ந. தங்கையா, ந. கனகலட்சுமி.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டிகள்

சபாநாயகர் கலந்து கொள்வார்

குருப்பசிட்டி, புதன்

அகில இலங்கை பாடசாலைகளின் கைப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட சாம்பியன் இறுதிப்போட்டிகள் முதல் தடவையாக யாழ்ப்பாணம் விளையாட்டு அரங்கில் எதிர் வரும் வெள்ளி, சனி ஆகிய இருதினங்களிலும் நடைபெற இருக்கின்றது. நாடு பூராவிலுமிருந்து பிரிவுச் சாம்பியன் கோஷ்டிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 23 மாவட்டங்களைச்சேர்ந்த பாடசாலைகள் இப்போட்டிகளில் கலந்து கொள்கின்றன. வலைப்பந்தாட்டப் போட்டியில் மேற்பிரிவிலும் கீழ்ப்பிரிவிலும் தலா 20 கோஷ்டிகள் பங்குபற்றுகின்றன. ஜனப் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகரும் நாத்தாண்டியதொகுதி எம். பி. யுமான திரு. அல்பேர்ட் எப். பீரிஸ் பிரதமவிருந்தினராகக்கலந்துகொண்டு வெற்றியீட்டும் கோஷ்டிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களை வழங்குவார். வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம், திரு. எஸ் சிவரத்தினம். திருமதி பி. குகதாசன் ஆகியோர் அடங்கிய கமிட்டியினர் மேற்படி போட்டிகளுக்கான ஒழுங்குகளைக் கவனித்து வருகின்றனர்.

நகுலேஸ்வராவுக்கு மீண்டும் முதலிடம்

மாவிட்டபுரம், புதன்

வலிவடக்கு தமிழாசிரியர் சங்கம் நடத்திய வடுடாந்த விளையாட்டுப் போட்டிகளில் கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம் இரண்டாவது தடவையாக முதலிடத்தைச் சுவீகரித்துள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வட்டார வித்தியாதரிசி திரு. வி. சண்முகநாதன் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டார். திருமதி சண்முகநாதன் பரிசில்களை வழங்கினர்.

தமிழ்த் தந்தி ஆங்கிலத்தில் வந்தது!

சுழிபுரம், புதன்

வவுனியாவில் இருக்கும் ஒருவர் சென்ற திங்கட் கிழமை சுழிபுரம் நெல்லியானில் இருக்கும் தமது நண்பர் ஒருவருக்கு வவுனியாத் தபாற் கந்தோரிலிருந்து தந்தி ஒன்றைஅனுப்பிவைத்தார். தந்தி அடுத்தநாள் மாலை சுழிபுரம் தபால் கடிதம் கொடுப்பவரால் கடிதம் கொடுப்பதுபோல் விநியோகிக்கப்பட்டது. தந்தி அடித்தவர் தமிழ் மொழியில் எழுதிக்கொடுத்தார் எனத்தெரியவந்தது. அந்தத் தந்தி ஆங்கிலஎழுத்தில் அப்படியே பலஎழுத்துப்பிழைகளுடன்எழுதப்பட்டிருந்தது. தந்தியில் தம்பியின் முயற்சி என்பதும் புரியும்மொழியில் முறையாக எழுதப்பட்டும் மற்றைய சொல்லுகள் ஒன்றும் வாசிக்கமுடியாத விதத்தில் அரைகுறையுடன் புரியாத விதத்தில் தந்தி வந்தவர் பகார் செய்துகொண்டார்.

ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பல வசதிகளுடனுமுள்ளது. ஆனால் இந்து வாலிபர்களுக்குக் கால்ஊன்றி காரியம் செய்ய கொழும்பிலே ஒரு சிறிய இடமும் இல்லாதது பெரிய குறை. இதைப் பற்றி ஈழத்து இந்து சமூகம் பெருமை கொள்ளமுடியாது.

உடுப்பிட்டி பிரதிநிதி தான் ஆரம்ப முதல் இச் சங்கத்தின் தலைவரென்று தெரிகிறது. அவரும் மற்ற இந்து பிரமுகர்களும் இவ் விஷயத்தில் சற்றே ஊக்கமெடுப்பின், இந்தக் குறையை சிறிதாவது நீக்க முடியும். தங்கள் சங்கத்துக்கு ஓர்இடம் இருந்தால் சங்க வேலைகளை வளர்க்க முடியுமென்றும் அதிகமான வர்களை இதில் சேர்க்கலாமென்றும், சங்கக் காரியதரிசி தெரிவித்தார். இச் சங்கம் பல சோதனைகளுக்கு மிடையில், நல்ல காரியங்களைச்செய்து வருகின்றது. இதற்குக் கூடிய சீக்கிரத்தில் நல்ல இடம் கிடைத்து, இதன் சேவைகளுக்கு போதிய ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்கவேண்டியது, கொழும்பிலுள்ள இந்து சமூகத்தின் மேலான கடமையும் பொறுப்புமாகும்.

ஃஃ ஃஃ ஃஃ

அடுத்தடுத்து பல தமிழ் பிரமுகர்கள் மறைவது மிக வருத்தமளிக்கிறது. சேர் கந்தையாவை அடுத்து, கைத்தொழில் வர்த்தக பிரமுகரான ராஜேந்திரம் மறைந்துவிட்டார். சென்ற வெள்ளிக்கிழமைதான் ராஜேந்திரம் தம்பதிகளை கால்பேஸ் கடற்கரையில் கண்டேன். ஞாயிறன்று அவர் இறந்துவிட்டாரென்று கேட்டதும் நம்பமுடியவில்லை.

சுமார் 40 வருடங்களுக்கு முன்பாக ஒரு வெள்ளைக்கார கம்பெனியில் சேல்ஸ்மென்னாக இருந்த அவர், தமது சொந்தத் திறமையால் கொழும்பிலேயே முக்கிய தொழில் அதிபர்களில் ஒருவராக உயர்ந்துவிட்டார். அவரது வாழ்க்கை நமது வாலிபர்களுக்கு மேலானதோர் வழிகாட்டியாக இருக்கவேண்டும்.

'ஈழநாடு' பத்திரிகை முதல் முதலில் வார சஞ்சிகையாக வெளியானதல்லவா? அதன் முதல் இதழ் கொழும்பு வந்து சேர்ந்ததும் நூறு ரூபாய் கொடுத்து ஒரு இதழை வாங்கி, இப்பத்திரிகைக்கு ஆதரவு அளித்து ஆசிகூறிய அன்பர் அவர்.

கன்தையிலே ஏராளமான அன்பர்கள்கூடி அவருக்குத் தங்கள் இறுதி மரியாதை தெரிவித்தனர். அவர் ஆன்மா சாந்தி அடைவதாக!

ஃஃ ஃஃ ஃஃ

ஈழத்திலே முதல் முதலாக தொழிலாளர் ஊழியர் பிராவிடெண்ட் நிதியை அமைத்து வெற்றிகரமாக நிர்வகித்தவரும் டிபுடி தொழில் கமிஷனராக இருந்தவருமான என்.மகாதேவா என்ற திறமைமிக்க தமிழர் தமது 47-வது வயதிலே, [illegible] நஷ்டமாகும் மொழி காரணத்தால்

வரி விளம்பரம்

கல்வி

ஜி. சி. ஈ. பரீட்சையில் சித்தி பெறவேண்டுமாஞல் எங்கள் காலை/மாலை வகுப்புகளில் சேருங்கள். யாழ்ப்பாண டியூட்டோரியல் கல்லூரி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர். 998

வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

முத்திரை தட்டுப்பாடு

சுழிபுரம், புதன்

இப்பகுதியிலுள்ள சகல தபாற் கந்தோர்களிலும் ஒரு ரூபாய் தொடக்கம் இருபது ரூபாய் பொறுமதியான முத்திரைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. முத்திரைக்கு நல்ல ''கிராக்கி'' ஏற்பட்டதற்கு கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையே காரணம் என்று தெரியவருகிறது. வேண்டிய முத்திரைகளை முன்கூட்டியே பெற்று வைத்துக் கொள்ளும்படி தபால் பகுதியினரால் வேண்டப்பட்டும் இப்பகுதி தபால் அதிபர்கள் அதன்படி செய்யாததே முத்திரை தட்டுப்பாட்டுக்கு காரணமாம்.

பக்திப் பாடல்கள் இடம்பெறும்

பருத்தித்துறை, புதன்

இம்மாதம் 25-ம் திகதியன்று ஆரம்பமாக இடுக்கும் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவ காலங்களில் ஒலிபெருக்கி மூலம் பக்திப்பாடல்கள் தவிர்ந்த ஏனைய பாடல்கள் ஒலிபெருக்கப்படுவதைத் தடைசெய்வதென ஆலய மடத்தில் நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

அவர் அரசாங்க பதவியை விட்டு முதலாளிகள் சங்கக் காரியதரிசி பதவியை ஏற்றார். சென்ற திங்கட்கிழமை காலை வழக்கம்போல் தமது காரியாலயத்துக்கு வந்து அமர்ந்ததும், திடீரென மாரடைப்பால் மரண மடைந்தாராம்.

இம்மாதத்துக்குள் அடுத்தடுத்து ஏன் ஈழத்துத் தமிழ் சமூகத்துக்கு இந்த நஷ்டங்கள்? இந்திய வம்சாவளியினரான தோட்டத் தொழிலாளருக்கும் பிராவிடென்ட் நிதிவசதியை அவர் அளித்ததால், சுமார் பத்து லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் இங்கு இதனால் பயனடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

∴ ∴ ∴

கூற்றுயினவாறு
விலக்ககலீர்
கொடுமைபல செய்தன
நானறியேன்
ஏற்றுயடிக்கேயிரவும்
பகலும்
பிரியாதுவணங்குவ
னெப்பொழுதும்
தோற்றுதென் வயிற்றி
னகம்படியே
குடரோடு தொடக்கி
முடக்கியிட
வாற்றேனடியே னதிகெக்
கெடில
வீரட்டானத்
துறையம்மானே

—திருநாவுக்கரசுநாயனார்

விற்பனைக்கு

ஏச் போர் (H 4) விதை நெல் 150 புசல் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்; இளைப்பாறிய பெரிய தம்பி ஆசிரியர் வீடு, காரைக்கால் றோட்டு, இணுவில். 1032

தேவை

மனேஜர்-S.S.C. தேர்ச்சி. கூட்டுறவுப்பயிற்சியில் தேறியவர் விரும்பத்தக்கது. வயது 30-40. பிணை ரொக்கம் ரூபா 1000/- Fidelity Bond ரூபா 2000/- சம்பளம்: ரூபா 150/- -60-250/- (சகல படிகளும்உட்பட) அனுபவம் அவசியம். விற்பனையாளர்— தமிழும் ஆங்கிலமும் நன்றாக எழுதவாசிக்கக் கூடியவர். பிணை ரொக்கம் 250/- சம்பளம் 90/- 36-150/- அனுபவம் வாய்ந்தவர். மேற்கூறிய இரு ஊழியர்களும் ஆறுமாதகாலம் திருப்திகரமான சேவை செய்தால் நிரந்தர ஊழியர்கள் ஆவர். திருப்தி இல்லாவிடில் வேலை நீக்கம் செய்யப்படுவர். விண்ணப்பங்கள் தபால் மூலம் 22-9-65-க்கு முன் எனக்கு அனுப்பப்பட வேண்டும். கு. நேசையா, தலைவர், 6, சோமசுந்தரம் வழி,, சுண்டிக்குளி. 1031

பிரதிநிதிகள் (Representatives) தேவை. ஆயிரம் ரூபாடிப்போசிட்(ரொக்கம்) கட்டக்கூடிய நற்சான்றுப்பத்திரமுள்ளவர்களுக்கு மாதச்சம்பளம் ரூபா100/-ம் கொமிஷனும் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல.1030 ஈழநாடு மேற்பார்த்து.1030

பலசரக்குக் கடைக்கு நல்ல அனுபவமுள்ள கணக்கப்பிள்ளை தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். 'மங்களகபே', பிரதானவீதி, அச்சுவேலி 1034

கண்டாவளைச் சங்கத்துக்குக் காவலாளர் தேவை. வயது 30க்கு மேல் 50க்குள். சம்பளம் மாதம் ரூபா 90/- (சகல படிகளும் உட்பட) சங்க வளவில் நிரந்தரமாக வசிக்கவேண்டும். குடும்பத்தோடு வசிக்கக் கூடியவர் விரும்பத்தக்கது. நற்சாட்சிப்பத்திரத்துடன் 23-9-65க்கு முன் விண்ணப்பிக்கவும். காரியதரிசி, 218-220, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1033

மன்னரில் கடும் வரட்சி

மன்னர், புதன்

மன்னர் மாவட்டத்தில் போதிய மழை இல்லாத படியினல் கடும் வரட்சி நிலவுகிறது. கடந்த சூரூவளியினல் பல மரங்கள் வீழ்ந்தமையால் இளைப்பாறுவதற்கு முடியாமல் பாதசாரிகள் கஷ்டமுறுகின்றனர். இந்த அகோர வெப்பத்தினல் மன்னர்—பள்ளிமுனை வட்டாரத்திலும் சிறுகுழந்தைகளுக்கு பலவித மானநோய்கள் உண்டாகியுள்ளன. இவ்வரட்சியினல் கால்நடைகள் நாளுக்கு நாள் இறந்தவண்ணமேயிருக்கின்றன.

புதிய தலைவருக்கு வரவேற்பு

சுழிபுரம், புதன்

பண்டத்தரிப்பு கிராம சபை புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட பண்டிதர் இ. இராமலிங்கத்துக்கு மாதகல் மக்கள் பொது வரவேற்பொன்றை அளிக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இனத்துவேஷ வலையில் விழவேண்டாம்"

முஸ்லிம்களுக்கு தொழில்மந்திரி வேண்டுகோள்

கொழும்பு, செவ்.

இந்தியா-பாகிஸ்தான் சண்டை காரணமாக இந்நாட்டில் இனத்துவேஷத்தைக் கிளப்ப முயற்சிப்பவர்களின் வலையில் விழவேண்டாமென்றும், இதன் மூலம் தவருன பாதையில் செல்லவேண்டாம் என்றும் தொழில், வீடமைப்பு மந்திரி ஜனுப். எம் எச். முகம்மது முஸ்லிம்களைக் கேட்க்கொண்டிருக்கிருர்.

வெலிமடையில் ஒரு நிகழ்ச்சியில் அவர் பேசியபோது இந்நாட்டு முஸ்லிம்கள். இலங்கையின் ஒரு அங்கமாக விளங்கவேண்டும் எனக் கூறினுர்.

இது போன்ற தேசிய முக்கிய பிரச்னையில் சகலரும் பிரதம மந்திரிக்கு ஆதரவளிக்கவேண்டும் எனவும் மந்திரி முகம்மது கேட்டுக்கொண்டார்.

உள்நாட்டு மந்திரி டாக்டர் தஹநாயகா பேசியபோது தேசிய அரசாங்கத்தில் ஜாதி, மத வேறுபாடுகள் இருக்கக்கூடாதெனக் கூறினுர்.

பத்தேகம தேர்தல் ஆட்சேப மனு தள்ளுபடி

கொழும்பு, செவ்.

பத்தேகம தேர்தல் ஆட்சேபமனு மாவட்ட நீதிபதி திரு. என். சிவஞானசுந்தரம் முன்னிலையில் இன்றுகாலே விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டபோது வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

வாக்குகள் மீண்டும் எண்ணப்படவேண்டுமென வழக்கைத் தாக்கல்செய்திருந்தவர் விடுத்த வேண்டுகோளை நீதிபதி நிராகரித்தார்.

திரு. நீல்டி அல்விஸின் தெரிவை ஆட்சேபித்து இந்த வழக்கு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

ஹென்பெந்தர எல்பிட்டியா தேர்தல் ஆட்சேபமனு இன்று நீதியரசர் திரு. ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது தேர்தல் தினத்தன்று வாக்குப் பெட்டிகளுக்கு காவலாக இருந்த பிட்டிகலே பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த திரு. ரணசிறீ சாட்சியமளித்தார்.

தெனியாயா தேர்தல் ஆட்சேபமனு இம்மாதம் 17-ம் திகதி நீதியரசர் திரு. மாணிக்கவாசகர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்படும். அன்று விசாரணைக்கான் திகதி தெரிவிக்கப்படும்.

பிங்கிரியா தேர்தல் ஆட்சேபமனு அடுத்த வருடம் ஜனவரி 31-ம் திகதியன்று எடுத்துக்கொள்ளப்படும்.

"விமான சண்டையைத் தவிர்க்க பாகிஸ்தான் விரும்புகிறது"

பாக். தாக்குதலில் 2-வது ஐ. நா. விமானம் சேதம்

புதுடில்லி, செப். 14

கடைசியாகக்கிடைத்துவரும் தகவல்களிலிருந்து பாகிஸ்தான் விமானச்சண்டைகளைத் தவிர்த்துவருவதாகத் தெரிகிறது. இப்போது பாக். விமானங்களைத் தேடி அழிக்கும் வேலையில் இந்திய விமானங்கள் ஈடுபட்டிருக்கின்றன.

இன்று நடைபெற்ற தாக்குதலில் 4 ''ஹண்டர்'' விமானங்களையும், 50 கவச வண்டிகளையும் இந்திய விமானப்படை அழித்தது.

ஜம்மு—ஸியால்கோட் அரங்கில் இந்தியப் படைகள் தொடர்ந்து வெற்றிபெற்றுவருகின்றனஎன்றும், பெருமளவு கவசவண்டிகளை உபயோகித்து இந்திய முன்னேற்றத்தை பாகிஸ்தானியர் தடுக்க முயன்றும் அது வெற்றிபெறவில்லை என்றும், பல கவசவண்டிகள் பிடிக்கப்பட்டன என்றும் லோகசபையில் இன்று அறிவிக்கப்பட்டது. இந்தியப் படைகளின் முன்னேற்றத்தைத் தடுக்கும் பொருட்டு கணவாய்களையும், பாலங்களையும் பாகிஸ்தானியர் தகர்த்துவருகிருர்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. பல பாகிஸ்தானிய டாங்கிகள், அவற்றின் சிப்பந்திகளுடன் பிடிபட்டனவாம்.

4 நாள் சேதம்

ஹாஜிபீர்—டிட்வாங் பகுதியில் கடந்த 4 தினங்களாக நடைபெற்ற சண்டையில் 66 பாகிஸ்தான் டாங்கிகள் சேதமாக்கப்பட்டன என்றும், 32 டாங்கிகள் பிடிபட்டன என்றும், 15 விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன என்றும், வேறு பல விமானங்கள் தரையில் அழிக்கப்பட்டன என்றும் மந்திரி ஏ. எம். தோமஸ் சபையில் அறிவித்தார்.

கிழக்கு அரங்கில்

பாகிஸ்தானியர் கிழக்கு அரங்கில் வலுத்தாக்குதலை ஆரம்பிக்க முயன்றுவருவதாகவும், கல்கத்தாவுக்ருகே விமானத்தாக்குதல் நடத்த முயன்ற போது ஒரு 'ஸெப்ரி ஜெட்' விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது என்றும் அறிவிக்கப்பட்டது.

சாஸ்திரி

பி. பி. ஸி. டெலிவிஷனுக்கு அளித்த பேட்டி ஒன்றில் திரு. சாஸ்திரி பின்வருமாறு கூறினுர்.

'போரை விஸ்தரிக்க இந்தியா விரும்பவில்லை. பாகிஸ்தான் மக்களுடன் சண்டையிடவும் நாம் விரும்பவில்லை. தற்பாதுகாப்புக்காக, பாகிஸ்தான் ராணுவத்தை அழிப்பதே இந்தியாவின் நோக்கம். ஆயுதப் போர், இந்தியாவின் சமாதானக் கொள்கைக்கு மாருனதாஞலும் நாட்டின் சுதந்திரமே மிகவும் முக்கியம்.

பெண்கள் இரத்ததானம்

அகில பாரத மாதர்சபை இரத்ததானம் செய்யுமாறு தமது அங்கத்தினர்களுக்கு வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்து பலர் இரத்த தானம்செய்துவருகிருர்கள்.

கொழும்பில்

பாக். கப்பல்களின் தாமதம் நீடிப்பு

கொழும்பு, செவ்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நடைபெற்றுவரும் சண்டை காரணமாக கொழும்பில் வந்துள்ள 4 பாகிஸ்தானிய கப்பல்கள் குறிப்பிட்ட இடங்களுக்கு செல்லாது துறைமுகத்தில் தங்கி நிற்கின்றன. சுமார் 250 பிரயாணிகள் இதனுல் தாமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்திய கடற்படை இக் கப்பல்களை நடுக்கடலில் கைப்பற்றிவிடலாமென அச்சம்கொண்டுள்ளதாலேயே இவ்விதம் கப்பல்கள் பிரயாணம்செய்யாது தங்கியுள்ளன.

இந்திய ஹைகமிஷனர் இலங்கைப் பிரதமர் சந்திப்பு

கொழும்பு, செவ்.

இந்திய ஹைகமிஷனர் திரு. பீம்சென் சச்சார் இன்று பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவைச் சந்தித்து இந்திய பாகிஸ்தான் யுத்த நிலை குறித்து எடுத்துக் கூறினுர்.

திரு. சச்சார் ஒரு மணி நேரம் வரை திரு. டட்லியுடன் சம்பாஷணை நடத்தியபோது காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக தெரிவித்ததாகவும் எந்த நாட்டையும் ஆக்கிரமிப்பு செய்யும் எண்ணம் இந்தியாவுக்குக்கிடையாது என்று எடுத்துக்கூறியதாகவும் அறியப்படுகிறது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில்தோன்றியுள்ள தகராறு சமாதானமானமுறையில் தீர்க்கப்படுவதையே இலங்கை விரும்புவதாகவும் தற்போது தோன்றியுள்ள நிலை குறித்து இலங்கை பெரும் கவலை கொண்டிருப்பதாகவும் திரு. டட்லி தெரிவித்ததாகத் தெரிகிறது,

---

கொழும்பு, செவ்.

மரணதண்டனை நீக்கப்படவேண்டுமென்பது பற்றி செனட்டில் அடுத்த திங்கட்கிழமை விவாதிக்கப்படவிருக்கிறது. இதற்கான பிரேரணையை செனட்டர் வெருென் திஸநாயகா சமர்ப்பித்துள்ளார்.

ஐ. நா. விமானம் சேதம்

நேற்று ஸ்ரீநகர் மீது பாகிஸ்தான் நடத்திய விமானத் தாக்குதலில் ஐ. நா. வுக்குச் சொந்தமான இரண்டாவது விமானம் ஒன்றும் சேதமடைந்தது.

பிணமாக இறங்கினர்

குந்தாஸ்ப்பூருக்கருகே ஒரு பாகிஸ்தான் விமானம் சுடப்பட்டபோது விமானி பாரசூட்டில் குதித்தார் என்றும், கிராமவாசிகள் அவரைப்பிடிக்கச் சென்றபோது அவர் இறந்துகிடந்தார் என்றும் அறிவிக்கப்பட்டது.

உயர் அதிகாரிகள் பலி

பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகள் பலர் யுத்தத்தில் இறந்துவிட்டதால், மாஜி ராணு தலைமை அதிகாரிகள் ராவல்பிண்டியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டிருக்கிருர்கள்.

ஈரான், துருக்கி தலைவர்கள்

ஈரான் பிரதமரும், துருக்கியின் வெளிநாட்டு மந்திரியும் இன்று ராவல்பிண்டிக்கு வந்திருக்கிருர்கள். இதற்கிடையில் துருக்கி பிரதமர் திரு. சாஸ்திரிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிருர்.

இன்று ராஜ்ய சபையில் நடைபெற்ற விவாதத்தில் இந்தோனேவியாவிலுள்ள பாரதப் பிரதிநிதியை திருப்பியழைக்க வேண்டுமென பல அங்கத்தினர்கள் வற்புறுத்தினர்.

"ஆனந்த குமாரசாமியின் நூல்கள் தமிழாக்கப்படவேண்டும்"

நீதியரசர் தம்பையா பேச்சு

யாழ்ப்பாணம், புதன்

''கிழக்கத்திய தேசத்து கலை கலாச்சாரத்தைமேற்கு உலகுக்கு அறியச்செய்தவர் டாக்டர் ஆனந்தகுமாரசாமி. இந்து மதத்தைப் பற்றி எதுவுமே அறியாதவர்களாக இருந்த அவர்களுக்கு அதன் சித்தாந்தங்களைப் புரியவைத்து, தமிழ் நாட்டுக் கலையான பரத நாட்டியக் கலையை அவர்களுக்கு விளங்கவைத்து நம் நாட்டுக் கலாச்சாரங்களை வளர்ப்பதற்குப் பெரிதும் தொண்டாற்றிய திரு. ஆனந்தகுமாரசாமி கிழக்கத்திய தேசத்திலிருந்து மேற்கத்திய தேசத்துக்குச் சென்ற கீர்த்திவாய்ந்த ஒரு கலாச்சாரத் தூதராவார்''

யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நேற்று மாலை திருமதி டொனுலூயிஸ் ஆனந்தகுமாரசாமிக்கு அளிக்கப்பட்ட பொதுவரவேற்பில் கலந்துகொண்ட நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா கியூ. ஸி. பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. தம்பையா மேலும் பேசுகையில், ஆனந்த குமாரசாமி எழுதிய நூல்கள் யாவும் தமிழில் மொழி பெயர்க்கப்படவேண்டுமென்றும், சாதாரணமக்கள் அனைவரும் படிக்கக் கூடியவிதத்தில் அவை சகல இடங்களிலும் பெறக்கூடியதாக இருக்கவேண்டுமென்றும் கூறினுர்.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா பேசுகையில் ஆனந்த குமாரசாமியின் லட்சியங்களிலிருந்து தற்போது நம் நாட்டு மக்கள் பலகாததூரம் சென்றுவிட்டார்கள் என்றும், ஆனந்தகுமாரசாமி கலைஞர்கள் ஒவ்வொருடைய செயல்களிலும் இறைவனைக் கண்டாரென்றும் சொன்னுர்.

முன்னுள் யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு, ஏ. ஈ. தம்பர் பேசுகையில், ஆனந்தகுமாரசாமி இந்தியப் பெண்மணிகளின் சிறப்பை நன்ருக உணர்ந்திருந்தார் என்றும் அழகு, உண்மை, சிறப்பு எல்லாவற்றையும் ஒரே தெய்வீகப் பார்வையுடனே ஆனந்தகுமாரசாமி நோக்கினுரென்றும் சொன்னுர். ''வெறும் மௌன ஞானியாக' இருந்து மட்டும் ஆனந்தகுமாரசாமி கலாச்சார வல்லுனராக வரவில்லை. கலை, கலாச்சாரம் ஆகிய துறைகளில் ஆராச்சிகள் பலசெய்து அறிஞரானுர்,' என்றும் திரு. தம்பர் கூறினுர்.

திருமதி ஆனந்த குமாரசாமி பேசுகையில், இறைவன் தான் சகலருக்கும் ஆசிரியன் என்றும், தமது கணவர் குமாரசாமிபோல பல குமாரசாமிகள் இந்நாட்டில் தோன்றவேண்டுமென்றும் சொன்னுர்.

வண்ணை வைத்திஸ்வர வித்தியாலய அதிபர் திரு. அம்பிகைபாகன் நன்றிதெரிவித்தார்.

விளையாட்டு கோஷ்டிகள் பரிசீலனை

கொழும்பு, செவ்.

இந்தியாவுக்கு விஜயம் செய்யவிருந்த இலங்கை விளையாட்டுக் கழகங்கள் அங்கு தோன்றியுள்ள நிலை காரணமாக தமது விஜயம் பற்றி மறுபரிசீலனை செய்துவருவதாக அறியப்படுகிறது எற்கனவே பல இந்திய விளையாட்டுக் கோஷ்டிகள் இலங்கை விஜயத்தை ரத்துசெய்துவிட்டன.

பரீட்சைப்பகுதியிலிருந்து பெற வேண்டும்

யாழ்ப்பாணம், வியா.

எதிர்வரும் டிசம்பரில் நடைபெறவிருக்கும் ஜி. ஸி. ஈ. பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதியும் பரீட்சைக்கான முழு விபரங்களும் கொழும்பு பரீட்சைப்பகுதி அதிகாரி காரியாலயத்திலேயே இருந்து பெற வேண்டுமென்றும் இவ்விபரங்களை யாழ்ப்பாணம் கல்விக் கந்தோரிலிருந்தோ அல்லது கொழும்பு கல்விக் கந்தோரிலிருந்தோ பெற முடியாதெனவும் விசாரித்ததில் தெரியவருகிறது.

சந்திரனுக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கூறினுர்.

சந்திரனில் மனிதனை இறக்கும் திட்டத்திற்கு அமெரிக்கா ஆண்டு ஒன்றுக்கு 100 கோடி பவுண் செலவழிப்பதாயும் மொத்தம் இத்திட்டத்திற்கு 700 கோடி பவுண் செலவாகும் என்றும் அவர் கூறினுர்.

சிறுமியுடன் முறைதவறி நடந்தாராம்

விசாரணை நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், வியாழன்

சிறுமியுடன் தகாத முறையில் நடந்துகொண்டதாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யு. தம்பையா கியூ. ஸி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 64-ம்ஆண்டு ஜூன் மாதம் 24-ந் திகதி மன்னுர்ப் பகுதியிலுள்ள விடத்தல்தீவு என்னும் கிராமத்தில் முகமது அப்துல்லா என்பவர் நாகூர் தம்பியின் மகள் பரீடாவிடம் தகாத முறையில் நடந்துகொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பதினெரு வயதான பரீடா நேற்றுச் சாட்சியமளித்தார். அதன் பின் எதிரி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் அவரைக் குறுக்குவிசாரணை செய்தார். டாக்டர் புவிராசசிங்கமும் சாட்சியமளித்தார்.

எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் திரு. சி. சுப்பிரமணியத்தின் அனுசரணையுடன் ஆஜரானுர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

80 நாடுகளுக்கு ஜெர்மன் சமுக்காளம்

பெர்லின், செப். 15

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் தயாரிக்கப்படும் பெறுமதியான சமுக்காளங்கள் 80 நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. ஜாகர்த்தாவில் ஜனுதிபதி சுகாணேவின் மாளிகையையும், அம்மானில் அலி-சாப்ரி பள்ளிவாசலையும் இந்த சமுக்காளங்கள் அலங்கரிக்கின்றன மற்றும் பாரசீக வளைகுடாவிலுள்ள நான்கு சிற்றரசுகளின் மன்னர்களின் அரண்மனைகளுக்கு இதே சமுக்காளம் தனிச் சோபையை அளிக்கிறது.

ஜெர்மன் ஜனநாயகக்குடியரசில் லயிப்சிக்கில் இம்மாதம் நடைபெறும் உலக வர்த்தகச் சந்தையில்ஐரோப்பிய நாடுகளும், ஆபிரிக்க அரபு நாடுகளும் இச்சமுக்காளங்களை பெருமளவு வாங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org